இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

UAN.TN03D0061112

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:19 நவம்பர் 2019 Vol. 5 Issue : 19 November 2019

சி.சாவித்ரி
ஷா. முஹம்மது அஸ்ரின்
ல.கு.சு.இராஜ்குமார்
ப.ராகசுதா
சி.விஜயன்
ம.செந்தில்குமார்

மு.கயல்விழி
SINNATHAMBY LAVAPRIYAA
கி. ஜெகதீசன்
செ. பிரவீன்

அ.சு. செல்வரமேஷ்
பெ. விஜயகுமார்
ஜூ.மரியா செபாஸ்டின்
மு. வையாபுரி
த.சத்தியராஜ்

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364

நவம்பர் 2019 மலர் : 5 இதழ் : 19
November 2019 Volume V Issue 19

உள்ளே ...

தமிழ்ச் செவ்வியல்

தொல்காப்பியம் - தெலுங்கு மொழிபெயர்ப்பு
Tolkappiyam - Telugu Translation
முனைவர் சி.சாவித்ரி/Dr.Ch.Savithri | 4

பெரும்பாணாற்றுப்படையில் பழந்தமிழரின் உணவுகள்
Foods of ancient Tamizhar in Perumpaanaatrupadai
ஷா. முஹம்மது அஸ்ரின் / S.Mohamed Azrin | 12

சங்க இலக்கியத்தில் தாயும் சேயும்
Mother and Child in the Sangam literature
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 19

குறுந்தொகை - நெஞ்சொடு கிளத்தல் : உளவியல் பார்வை
The Psychological View of Heartful Lament in Kurunthokai
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 25

பத்துப்பாட்டில் ஆடை
Clothing in Paththuppattu
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30

வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

காவிரிப் படுகையில் அருகி வரும் உம்பளாச்சேரி எருதுகளின் எண்ணிக்கையும், அதன் பயன்பாடுகளும்
Declining of Trend of Umblachery Bullocks in Numbers and Its Utility in Cauvery Delta Zone
கி. ஜெகதீசன்/K.Jagadeesan, செ. பிரவீன் /S.Praveen /அ.சு. செல்வரமேஷ் /A.S. Selvaramesh, பெ. விஜயகுமார்/P. Vijayakumar, லூ.மரியா செபாஸ்டின்/L.Maria Sebastin | 34

பல்லவர் கால வரிவிதிப்பு முறை
Pallavas Taxation method
மு.கயல்விழி/M.kayalvizhy | 37

...

Chief Editors

Dr.M.Muneesmoorthy
Assistant Professor in Tamil
Bishop Heber College, Trichy - 17.

Dr.T.Sathiyaraj
Assistant Professor in Tamil
Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.

ADVISORY TEAM

Dr.S.V.Shanmugam (Chidambaram)
Dr.S.Rajaram (Nagarkovil)
Dr.Silambu.N.Selvarasu (Pondichery)
Dr.N.Veluchamy (Salem)
Sri S.SriKantharasa (Australia)

Editorial Team

Dr.A.Mani (Pondichery)
Dr.G.Balaji (Coimbatore)
Dr.R.Gunaseelan (Coimbatore)
Dr.N.Rajendran (Coimbatore)
Dr.R.Raja (Trichy)
Dr.B.Sivamaruthi (Thailand)
Dr.S.Muthuselvam (Madurai)
Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)
Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)

வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

ஞானபோதினி இதழில் தமிழியல் ஆய்வுகள்
Tamil Research through Jounals: Gnanapothini (1897-1903)
முனைவர் மு. வையாபுரி/Dr.M. Vaiyapuri | 48

அறிவைக் கட்டமைப்பதிலும், அறிவை மீள் உருவாக்கம் செய்வதிலும் ஆய்வாளர்களின் வகிபங்கு
The role of researchers in the construction of knowledge and the reconstruction of knowledge
சின்னத்தம்பி லாவபிரியா/Sinnathamby Lavapriyaa | 61

ஒப்பும் மீக்கருத்தியலும்
(தமிழ் - தெலுங்கு இலக்கணப் பனுவல்களின் இரண்டாம் வேற்றுமை கருத்தியல்களை முன்வைத்து)
Oppum mīkkaruttiyalum (tamiḻ - teluṅku ilakkaṇap paṉuvalkaḷiṉ iraṇṭām vēṟṟumai karuttiyalkaḷai muṉvaittu)
சத்தியராஜ் த. / Sathiyaraj T. | 71

...

மதிப்பிடப்பெற்றது

ஞானபோதினி இதழில் தமிழியல் ஆய்வுகள்

Tamil Research through Jounals: Gnanapothini (1897-1903)

முனைவர் மு. வையாபுரி/Dr.M. Vaiyapuri[15]

Abstract: The 19th century is the most important period in Indian history. The newly introduced English education system, print media and the new administrative system that emerged through the print system in the last hundred years has led to tremendous changes in Indian social, economic, political and cultural platforms.It was through these changes that a new orientation of Tamil research was developed. Especially during this period a new generation of traditional Tamil background and the introduction of modern education emerged. It was in this context that magazines emerged in the Tamil context. A number of magazines have appeared in this period, focusing on Tamil literature. Many Tamil scholars who have experience in more than one language and literature such as English, Tamil and Sanskrit have contributed in these ways. In this series, Gnanapodini was a significant contributor to the Tamil Studies at the end of the nineteenth century and the beginning of the twentieth century. This article examines the contributions of Gnanapodini to the Tamil Studies with historical evidence.

Keywords: தமிழியல், ஞானபோதினி, மு.சு. பூர்ணலிங்கம்பிள்ளை, வீ.கோ.சூரியநாராயண சாஸ்திரி, சிலப்பதிகாரவாராய்ச்சி

முன்னுரை

இந்திய வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு என்பது மிக முக்கியமான காலமாகும். இந்நூற்றாண்டில் புதிதாக அறிமுகமான ஆங்கிலக் கல்வி முறை, அச்சு முறைமையின் ஊடாகத் தோற்றம் பெற்ற அச்சு ஊடகங்கள், புதிய நிர்வாக அமைப்பு முறைகள் ஆகியன இந்திய சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் மிகப் பெரிய அளவிலான மாற்றங்கள் நிகழ வழிவகுத்தன.

இந்த மாற்றங்களின் வழியாகத்தான் புதிய நோக்கிலான தமிழியல் ஆராய்ச்சியும் உருப் பெற்றது. குறிப்பாக இக்காலக்கட்டத்தில் பாரம்பரிய தமிழ்ப் பின்புலமும், நவீன கல்வி முறையின் அறிமுகமும் கிடைக்கப்பெற்ற ஒரு புதிய தலைமுறையினர் தோன்றினர். இப்பின்புலத்திலேயே தமிழ்ச் சூழலில் இதழ்கள் தோற்றம் பெற்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சென்னை மாகாணம் என்பது பல்வேறு தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிக்கைகளின் பிறப்பிடமாக விளங்கியது. 1876களில் சென்னையில் மட்டும் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் சுமார் 19 செய்தி இதழ்கள் வெளிவந்துள்ளன.[1]

செய்தி இதழ்களைத் தவிர சமய நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள், அரசியல் அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட மனிதர்களால் நூற்றுக்கணக்கான

[15] உதவிப்பேராசிரியர், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை -15. Email: vaiyapurimurugan@gmail.com

பருவ இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் பல இதழ்கள் தமிழ் இதழியல் வரலாற்று நூல்களில் பதிவு செய்யப்படாமலேயே உள்ளன. காட்டாக 1869 முதல் 1943 வரையான காலக்கட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களால் நடத்தப்பட்ட 38 இதழ்களில்[2] ஒரு பைசா தமிழன் போன்ற சில பத்திரிக் கைகள் தவிர மற்ற பத்திரிக்கைகள் பற்றிய குறிப்புகள் பதிவாகாமலேயே உள்ளன. இவற்றுள் சில இதழ்கள் பிரிட்டிஷ் அரசின் ஆதரவோடும் இன்னும் சில இதழ்கள் ஆங்கிலேயர்களாலும் நடத்தப்பட்டுள்ளன.

அவ்வகையில், இக்காலப் பகுதியில் தமிழ் இலக்கியத்தினை முதன்மைப்படுத்திப் பல்வேறு இதழ்கள் வெளிவந்துள்ளன. ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் என ஒன்றிற்கும் மேற்பட்ட மொழி, இலக்கியங்களில் அனுபவம் மிக்க கற்றறிந்தவர்கள் பலர் இவ்விதழ்களில் பங்களிப்புகள் செய்தனர்.

இவர்கள் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, சமயம், தத்துவம், கல்வி, அறிவியல், அரசியல் எனப் பலதுறைகள் சார்ந்து தங்கள் எண்ணங்களைக் கட்டுரைகளாக, நூல்களாக வெளியிட்டனர். இவற்றிற்குப் பெரிதும் உதவியாகவும் களமாகவும் அமைந்தவை அக்காலத்தில் தோன்றிய இதழ்களே ஆகும்.

1840களில் யாழ்ப்பாணத்திலும், மதுரையிலும் வெளியிடப்பட்ட உதயதாரகை பத்திரிகை தொடங்கி 'ஞானபாநு", 'ஞானபோதினி", 'தேசோபகாரி", 'ஜநவிநோதினி", 'தமிழியன் ஆண்டிகுரி", 'சிந்தாந்த தீபிகா", 'ஒரு பைசா தமிழன்" இதழ்கள் உட்பட 1920 வரை தமிழ்ச் சூழலில் நூற்றுக்கணக்கான இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விதழ்களுள் பொதுவான செய்திகளோடு, தமிழியல் ஆய்வு சார்ந்தும் பல்வேறு செய்திகள், கட்டுரைகள், விவாதங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இக்காலத்தில் அறிமுகமான நாவல் இலக்கியங்களை மட்டுமே வெளியிடும் இதழ்களும்கூட வெளிவந்துள்ளன.

இதழ்களின் மேற்கண்ட செயல்பாடுகளின் தொடர் விளைவாகத்தான் தமிழ்ச் சூழலில் புதிய நோக்கிலான தமிழியல் ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின. இவ்வாறான தொடக்க கால இதழ்களின் தமிழியல் ஆய்வுப் போக்குகளை எதிர்கால இளந்தலைமுறையினருக்கு எடுத்துரைப்பதன் மூலமும் அவற்றை மீளாய்வு செய்வதன் மூலமும் தமிழியல் ஆய்வுகளின் எல்லையை நாம் விரிவடையச் செய்ய இயலும்.

19ஆம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வுகள்

நாம் இன்று பொருள் கொள்கின்ற அளவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா என்றால், இல்லை என்றே சொல்லலாம். உரை, பதிப்பு, விளக்கவுரை, அறிமுகம், குறிப்புகள், விவாதம், ஐயம், மொழிபெயர்ப்பு என்பது போன்ற நிலைகளிலேயே தொடக்ககாலத் தமிழியல் ஆய்வுகள் அமைந்திருந்தன. இந்த இடத்தில் 1950களில் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி பற்றி நூல் எழுதிய ஏ.வி. சுப்பிரமணிய அய்யரின் மேற்கோளைக் குறிப்பிடுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

> "தமிழாராய்ச்சி என்பதன் பொருள் என்ன? இதற்கும் விளக்கம் வேண்டுமா என்று சிலர் ஐயுறலாம். ஆனால் கருத்துத் தெளிவின் பொருட்டு விளக்கம் அவசியமாகிறது. தமிழ் மொழி அதிலுள்ள இலக்கியம், இலக்கணம் பற்றிய கொள்கைகள், தமிழ்ப்புலவரின் காலம், வாழ்க்கை, நூல்களின் தன்மை, தரம், அவை எழுதப்பெற்ற சூழ்நிலை, புலவருக்கும் அவரை ஆதரித்த அரசர், வள்ளல்கள் முதலானோருக்கும் இடையே நிகழ்ந்த உறவு ஆகியவைகளைப்

பொருளாகக் கொண்டு, விருப்பும் வெறுப்புமின்றி, நம்பத் தகுந்த ஆதாரங்களை வைத்துத் தக்க பரீசிலனை முறைகளைக் கையாண்டு தற்காலப் பண்புடன் ஆராய்ந்து உண்மையை நாடும் முயற்சியே தமிழாராய்ச்சி. மேலும், தமிழரின் சரித்திரம், நாகரிகம், தமிழ் நூல்களின் இலக்கிய விமரிசனம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள முயல்வதும் தமிழாராய்ச்சி என்பதற்குள் பொதுவாக அடங்கும்"[3]

எனினும் இறுதியாகக் குறிப்பிட்ட தமிழரின் சரித்திரம், நாகரிகம், தமிழ் நூல்களின் இலக்கிய விமரிசனம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ளும் முயற்சியாகத்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கிய ஆய்வுகள் அமைந்திருந்தன. குறிப்பாகத் தொடக்ககாலத் தமிழ் இதழ்களில் இவ்வகையான ஆய்வுப் போக்குகளே பதிவாகியுள்ளன.

தொடக்ககால இதழ்கள் தமிழ்மொழி பற்றியும், தமிழ் இலக்கியம் பற்றியும் ஒரு பெரும் சிந்தனைப் போக்கை ஏற்படுத்தியதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சில இதழ்கள் தமிழுக்காகவும், தமிழ் இலக்கியத்திற்காகவும் தம்மையே அர்ப்பணித்திருக்கின்றன.

"பத்திரிகை என்பது மொழி வளர்ச்சிக்கு 19ஆம் நூற்றாண்டில் கிடைத்த புதிய சாதனமாகும். அந்தச் சாதனம் அதே நூற்றாண்டில் தோன்றிய தேசிய எழுச்சியைப் பயன்படுத்திக் கொண்டு இந்திய மொழிகளுக்குப் புதுவாழ்வளித்தது. அந்த வகையில் தமிழ்ப் பத்திரிகை உலகில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் அவர்கள் சக்திக்கும் அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்கும் ஏற்ப தாய்நாட்டிற்கு அன்றி தாய்மொழிக்கும், தமிழுக்கும் தொண்டாற்றினர் என்பதில் ஐயமில்லை"[4]

என்னும் ம.பொ.சி.யின் கூற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்த பத்திரிகை தான் ஞானபோதினி.

ஞானபோதினி

கி.பி.1897ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்ட ஞானபோதினி பத்திரிகையின் அளவு 20.5செ.மீ x 12.5செ.மீ. மொத்த பக்கங்கள் 40, ஆண்டு சந்தா இரண்டரை ரூபாய், தனி இதழ் விலை நான்கணா. சென்னையில் தாம்ஸன் கம்பெனியால் பதிப்பிக்கப்பட்டது. 'மேலட்டையில் 'தாமின்புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்னும் குறள் அச்சிடப்பட்டது. ஸம்புடம், புத்தகம் என்னும் வரிசையில் இதழின் வெளியீடு குறிக்கப்பட்டுள்ளது. இதழ் அலுவலகம் 99/2, லிங்கிச்செட்டித் தெருவில் இருந்துள்ளது.[5]

இதழின் பெயர்க்காரணம்

ஞானபோதினி முதல் இதழில் இவ்விதழுக்கான பெயர்க்காரணம் பற்றிக் கீழ்காணுமாறு எழுதப்பட்டுள்ளது.

"சில வருடங்களுக்கு முன்னர் கல்வி ரசங்கொண்டு கேட்டவர்க்கும் பார்த்தவர்க்கும் இன்பம் அளித்துதவிய ஞானாமிர்தம் என்னும் பத்திரிகையில் ஸ்ரீ சபாபதி நாவலரவர்கள் பெரும்பாலும் சைவ சமயத்தைக் குறித்து மட்டும் எழுதிக்கொண்டிருந்தமையால் அப்பத்திரிக்கை சைவ சமயங்களால் மட்டும் ஆதரிக்கப்பெற்று நாளடைவில் அவர்களும் கைவிடவே விளங்காதொழிந்தது. ஆகையால் முன்னோர் அனுபவத்தைச் சிரமேற்கொண்டு பன்னாட் சிந்தித்துப் பலவகை ஞானங்களே ஒருருவமாய் விளங்கா

நின்ற சரஸ்வதியினடி பணிந்து அடியேன் பிரசுரிக்கும் பத்திரிகைக்கு "ஞானபோதினி" என்னும் நாமகரணமிடத் துணிந்தனம்" *(விஞ்ஞாபனம்:1897, ஆகஸ்ட்)* இந்த நோக்கம் இப்பத்திரிகையின் கடைசிக்காலம் வரையில் பின்பற்றப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

ஞானபோதினி பத்திரிகையின் ஆசிரியர்கள்

'ஞானபோதினி" பத்திரிகையின் ஆசிரியர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர் மு.சு. G+ர்ணலிங்கம் பிள்ளை. தமிழ் இலக்கிய வரலாற்றை முதன்முதலில் ஆங்கிலத்தில் எழுதியவரும் இவரே.[6] 1901 முதல் 1903 ஜூலை வரை மு.சு. G+ர்ணலிங்கம் பிள்ளையும் இவரோடு இணைந்து 1902 முதல் 1904 வரை தனித்தமிழ் இயக்கச் சிந்தனையாளர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும்[7] ஆசிரியர் பொறுப்பில் இருந்துள்ளனர். சாஸ்திரியாரின் இறப்பிற்குப் பிறகும் 1904 ஜூலை வரை இப்பத்திரிக்கை தொடர்ந்து வெளிவந்துள்ளதை அறிய முடிகிறது.

ஞானபோதினி பத்திரிக்கையின் உள்ளடக்கம்

ஞானபோதினி பத்திரிகையில் 1899ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளிந்த தலையங்கத்தில்,

"சென்ற இரண்டு வருடங்களில் தமிழ்க்கவி சரிதம், இலக்கணம், பொருநூல், உடல்நூல், வைத்தியம், தத்துவம், கானம், நாடகம், கல்வி, சமயம் முதலான விஷயங்களைப் பற்றி வாசகங்களும், கவிகளும் வரைந்தனுப்பிய பின்வரும் கணவான்களுக்கு நாம் என்னாலும் நன்றி பாராட்டுவோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிக்கையில் பல்துறை சார்ந்த பொருள் பற்றி எழுதப்பட்டிருப்பினும் இலக்கிய ஆராய்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளதை அறிய முடிகிறது. இலக்கிய ஆராய்ச்சி நோக்கில்,

"இயலும் இயற்கையும்(1902), பெரிய திருமொழி (1898), சீவகசிந்தாமணி வசனம்(1901), தாயுமானவர் தத்துவ விசாரம்(1902), இராமாயணம்(1901), மகாபாரதம் (1902), தமிழ்ப்புலவர் நிலைமை(1901), இரண்டு அருட்செய்யுட்களும் அவற்றின் உரையும்(1900), அந்தகக்கவி வீரராகவ முதலியார்(1902), மாணிக்கவாசகரும் கடைச் சங்கமும்(1899), திருவிளையாடற் கருப்பொருள்(1901), மதிவாணனாராய்ச்சி(1902), காசிக்காண்டம்(1902), சிறுநூலாராய்ச்சி(1897), இலக்கணவதிகாரம்(1901), பதினெண் கீழ்க்கணக்கு (1898), இராமாயணத்தின் தத்துவபோதம்(1902), சித்தாந்த தீபிகை நூதனவுரை(1898), நெடுநல்வாடை ஆராய்ச்சி(1903), திருக்கோவையாருண்மை விளக்கம் (1902), ஔவை முனிமொழி(1902), முதலாழ்வார்கள் வைபவம்(1901), திருவள்ளுவர் (1901,1902), தமிழக்கவி சரிதம்(1898), கல்லாட ஆராய்ச்சி(1902,1902), இராமயண வாராய்ச்சி(1901), இராமாயண வெண்பா(1902), திருவிடைமருதூர் கலம்பக ஆராய்ச்சி (1901), மதுரைத் தமிழ்ச்சங்க வருடோற்சவம்(1902),சிலப்பதிகார ஆராய்ச்சி (1899–1902), மானவிஜய ஆராய்ச்சி(1902), காளிதாசர்(1897), கலிங்கத்துப்பரணி(1902), சந்தான குரவர்(1900), சித்தாந்த தீபிகை புத்துரை விளக்கம்(1898), நக்கீரனாரின் தெய்வப்புலமை மாட்சி(1900), ஆசாரவிளக்கம்(1899), நாடகவிலக்கணச் சுருக்கம்(1900), சீவகசிந்தாமணி(1900), ஒழிவிலொடுக்கச் சிறப்புப் பாயிரவுரை (1900), அத்துவித வாக்கியத் தெளிவுரை(1900), ஒட்டக்கூத்தரருளிச் செய்த குலோத்துங்க சோழன் கோவை (1903) "[7]உள்ளிட்ட 59 தமிழாராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

நா. கதிரைவேற்பிள்ளை, மாகறல் கார்த்திகேய முதலியார், கல்குளம் குப்புசாமி முதலியார், சிவப்பிரகாச சுவாமிகள், வி.கோ. சுப்பிரமணிய சாஸ்திரியார், திருமணம் செல்வக்கேசவராய முதலியார், தி.மி. சேசகிரி சாஸ்திரியார், எஸ்.ஏ. திருமலைக்கொழுந்து பிள்ளை, ச.ம. நடேச சாஸ்திரி, மு.சு.பூர்ணலிங்கம் பிள்ளை, செய்யூர் முத்தையா முதலியார், அனவரத விநாயகம் பிள்ளை, நாகப்பட்டினம் வேதாச்சலம் பிள்ளை முதலிய அறிஞர்கள் இலக்கிய ஆராய்ச்சி பற்றி இப்பத்திரிக்கையில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

மேற்கண்ட அறிஞர்களின் இலக்கியப் பங்களிப்புகளைப் புறம்தள்ளிவிட்டு நாம் 19ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றையோ, தமிழ் ஆராய்ச்சி வரலாற்றையோ கட்டமைக்க இயலாது.

ஞாபோதினி பத்திரிகையில் சிலப்பதிகாரம், வால்மீகி இராமாயணம், மகாபாரதம், பெரிய திருமொழி, சீவகசிந்தாமணி, தாயுமானவர், திருநாவுக்கரசர் பாடல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், நெடுநல்வாடை, திருவள்ளுவர், கல்லாடம், கோவை, கலம்பகம், பரணி போன்ற இலக்கியங்கள் குறித்து ஆழமான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடர்ச்சியாகப் பதிப்பிக்கப்பட்டு வந்த சங்க இலக்கியங்கள் குறித்த விவாதங்களோ, கட்டுரைகளோ (ஒன்றிரண்டைத் தவிர) இப்பத்திரிகையில் இடம்பெறவில்லை.

அதுபோன்றே சிலப்பதிகாரம் தவிர்த்த பிற தமிழ்க் காப்பியங்களைப் பற்றிய ஆராய்ச்சியும் இடம்பெறவில்லை. கம்பராமாயணம் பற்றி இப்பத்திரிகையில் எவ்வித கட்டுரைகளோ விவாதங்களோ இடம்பெறவில்லை. சமகாலத்தில் வெளிவந்த பத்திரிகைகளிலும் இதே நிலையை நாம் காண முடியும். மேற்கண்ட இலக்கியப் பிரதிகள் பரவலான வாசிப்பிற்கு உட்படவில்லை அல்லது அறிமுகமாகவில்லை என்பதே இதற்குக் காரணமாக இருக்க வாய்ப்பு உண்டு. அல்லது இவற்றின்பால் இதழாசிரியர்களின் கவனம் செல்லவில்லை என்றும் கருத இடமுண்டு.

ஞானபோதினி பத்திரிகையில் வெளிவந்துள்ள ஒவ்வொரு ஆய்வுக் கட்டுரைகளைப் பற்றியும் குறிப்பிட்டால் அது ஒரு நீண்ட நூலாக அமைந்துவிடும். இப்பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகளின் ஆய்வாழத்தினைக் காட்டும் வகையில் சிலப்பதிகாரம் பற்றிய ஒரு கட்டுரையை பற்றி மட்டும் இங்குக் காண்போம்.

இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளில் சிலப்பதிகாரவாராய்ச்சி என்னும் தலைப்பில் பி.ஏ. பிரணத்தார்த்திஹரசிவன் என்பவர் எழுதிய கட்டுரை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 1899 மே முதல் 1902 ஏப்பிரல் வரை இக்கட்டுரை தொடர்ந்து வெளிவந்துள்ளது. இதில் சிலப்பதிகாரத்தின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, கதையின் போக்கு, முடிவு, நூலாசிரியர் இளங்கோவடிகளின் வரலாறு குறித்து எழுதியுள்ளார். இக்கட்டுரையின் முன்னுரையில் தமிழ்க் கவி சரிதம் என்னும் தலைப்பில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "கவிச் சரித்திரமென்பதே தமிழர்க்குத் தெரியாது. இக்காரணத்தினாலேயே அநேக சிறந்த கவிஞர்களுடைய சரிதங்களும், அவர்களால் செய்யப்பட்ட நூல்கள், விடுகவிகள் முதலியவைகளும், அவர்களுடைய நூல்களா லவர்காலத்தார்க்காய நன்மைகளும் தெரியாமற் போகின்றன. இதனாலேயே அநேக பழைய கவிகளுக்குப் பொருளுரைப்பது கடினமாகி விடுகிறது. கண்டவர்களெல்லோரும் தங்களுக்குத் தோன்றியவைகளை யெழுதிப் பழைய நூலாசிரியர்களது பெயரால் வெளியிடுகிறார்கள். எவ்வளவு அற்ப நூல்கள் புகழேந்திப் புலவர் பெயரால் அச்சாகி வெளியாகின்றன! பிராஞ்சியராய வீரமாமுனிவர் அநேக நூல்கள் செய்து

> அகத்தியருடைய பெயரை வைத்திருக்கிறார்! இவற்றிற்கெல்லாம் காரணமென்ன? கவிச் சரிதமின்மையே" *(ஞானபோதினி,1897,மே-20)*

என்று தமது ஆதங்கத்தினைப் பதிவு செய்கிறார். இந்த ஆதங்கமே இவ்விதழின் ஆசிரியர் மு.சு. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள் 1901இல் முதன்முதலில் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆங்கிலத்தில் எழுத காரணமாக அமைந்திருக்கும் எனக் கருத இடமுண்டு.

இக்கட்டுரையில் சிலப்பதிகாரத்தின் காலம் கி.பி.120 என்று இலக்கியச் சான்றுகளுடன் நிறுவும் கட்டுரையாளர், ஒவ்வொரு காதையையும் திறனாய்வு நோக்கில் விமர்சனம் செய்கிறார். இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ள கீழ்க்காணும் விமர்சனங்களைக் காணும் போது தற்காலத்தில் எழுதப்பட்ட இலக்கியத் திறனாய்வு கட்டுரை போலவே அமைந்திருப்பதனைக் காணலாம்.

> "இந்நூலுடையார் இக்காதையிலவர் தம் புலமையைக் காட்டியுள்ளாரே யன்றிப் படிப்போர் மனதைக் கவரவில்லை. சரித்திர வமைப்பினால் இவருக்கு ஒரு மனிதன், ஒரு மண்டபம், குளம், நகர் முதலியவற்றைச் செவ்வனே சிறப்பித்து வருணிக்கத் தெரியுமேயன்றி, மனோபாவங்களை யனுபவிக்குமாறு ஊடுருவி வருணிக்குந் திறனவ்வளவில்லை யென்றே சொல்ல வேண்டும்" *(ஞானபோதினி,1900-டிசம்பர்)*

என்று அரங்கேற்று காதையை விமர்சிக்கிறார். மற்றோரிடத்தில் இந்திரவிழ வூரெடுத்த காதையைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

> "இந்நூலாசிரியர் புகாரின் சிறப்பைச் செவ்வனே வருணித்துள்ளார். சேரநாட்டிளவரசராகிய இவர் வேற்றரசன் தலைநகராகிய புகாரை இவ்வளவு சிறப்பித்தது அவர்தம் நடுவுநிலைமையைக் காட்டுகின்றது. இவருடைய நகர வருணனையானது, அதிவீரராம வருணனையைப் போல வழுத கற்பனைகள் நிறைந்தது, உயர்வு நவிற்சியணிக் கிலக்கியமாக வில்லை. கம்பன் வருணனையைப் போன்ற நயமுமில்லை. ஆயினும், உள்ளவற்றை யுள்ளபடி யுரைப்பதிலேயும், தருணத் திற்கியையச் சொற்களைச் செய்வதிலேயும், அணிகளைப் பயன்படுமாறு ஆய்வதிலேயும் மிகச் சமர்த்தர் என்பதைக் காட்டுகிறது. இக்காதையில் பொதுமகளிரையும், அவர்தம் மிருக்கையையும் வருணித்திருப்பது மிக மேன்மையா யிருக்கின்றது. இவ்விடத்தில், அவர் அணிசிறந்து விளங்குவதைக் காணலாம். ஆயினும் கடலாடு காதையெனப் பெயர் கொடுத்த காதையிற் கடலாடுதலையே வருணிக்கவில்லை" *(மேலது, கட்டுரை தொடர்ச்சி)*

என்று சாடுகிறார். கடலாடு காதையில் கோவலனிடம் மனம் வேறுபட்டு மாதவி பிரிந்து சென்ற தருணத்தை குறிப்பிட வந்த கட்டுரையாளர்,

> "புருஷர்கள் எப்பொழுதும் தங்கள் மனைவிகள் தம்மையே நேசிக்க வேண்டுமென்றும், பிற புருஷரை யெக்காரணத்தாலும் புகழக்கூடாதென்றும் விரும்புகிறார்கள். அவர்கள் எவ்வளவு உண்மையாயிருப்பினும், அவர்களைப் பொய்யர்களென்றும், உறுதியற்றவர்களென்றும், சபல சித்தர்களென்றும் சந்தேகித்துக் குற்றம் சாட்டுகிறது வழக்கம். இப்பூமான்களோ தாங்கள் பிறமாதர்களிடத்துக் காதல்கொண்டு சென்றால் மட்டும் பெண்கள் குற்றம் சாட்டக் கூடாதாம். ஆனால் பெண்களோ, தமக்கு எப்பொழுதும் தன் கணவனன்பே

வேண்டியதென்றும், அதுகிடையாவிடத்து வருந்தியும் கிடைத்தவிடத்து களித்தும் வருவார்களேயன்றித் தாம் தந்நிலைமை யிற்றவறார்."

என்று ஆணாதிக்க மனப்பாங்கை சாடுகிறார். மற்றோரிடத்தில்,

"தான் செய்த தவற்றினையு மொப்புக்கொண்டு, அதற்கிரங்கித் தன்னுயிரையே பலியிட்டனன். அதனுடன் விட்டுவிடக் கூடாதா? மதுரை மாநகர் முழுவதையுங் கொளுத்தியதனாற் றன் மணவாளனை மீண்டுமடைந்தாளா? ஆதலின் இதனையொரு காவியாதர்மமென்றே கொள்வோம். இன்னும் அவ்விதம் மூட்டிய அம்மணி, அந்தனர், துறவியர், பசுக்கள், கற்புடைமகளிர், கிழவர்கள், குழந்தைகள் முதலியவர்களை விடுத்து மற்றவர்களைப் பொசுக்குமாறு அக்கினி பகவானுக் காணையிடுகின்றாள். என்னே இவளது கருணை! அந்தணரல்லாத ஜாதியார்களிற் காளையர்களைக் கணவர்களாயுடைய கற்புடைய மங்கையர்க ளெக்கதியுடையவார்களோ?" *(மேலது)* – என்று வினவுகிறார்.

இக்கட்டுரை முழுமை பெறுவதற்குள் இக்கட்டுரை ஆசிரியர் மரணடைந்து விட்டமையால் சிலப்பதிகாரம் குறித்த இக்கட்டுரை ஆசிரியரின் முழுமையான திறனாய்வினை அறிய இயலவில்லை. முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்தினை 19ஆம் நூற்றாண்டில் நுணுக்கமாக ஆய்வு செய்துள்ள முதல் முதன்மையான கட்டுரையாக இக்கட்டுரை அமைகிறது.

ஞானபோதினியில் படைப்புகள்

ஞானபோதினியில் பல்வேறு பாடல்கள், கதைகள், நாவல்கள், நாடகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. முப்பத்தேழு தலைப்புகளில் பாடல்கள் பல்வேறு அறிஞர்களால் எழுதப்பட்டுள்ளன. அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் பிரிட்டிஷ் அரசாட்சியின் சார்பானவையாக இருந்தது போன்றே ஞானபோதினி பத்திரிகையும் செயல்பட்டது. பிரிட்டிஷ் மகாராணியின் புகழ்பாடும் பல பாடல்களை வெளியிட்டது. இவை அனைத்தும் பெருமளவு விருத்தப் பாக்களாலும், ஆசிரியம், வெண்பா, கலிப்பா ஆகிய யாப்புக்களில் இயற்றப்பட்டுள்ளன. பன்னிரண்டு தலைப்புக்களில் மாலை, கடவுள் வாழ்த்து, தாலாட்டு, கும்மி, உலா, சிறப்புக் கவிகள் போன்ற பாடல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றுள், அசலாம்பிகையம்மையாரால் எழுதப்பட்ட பெண்கள் கல்வி பெறுவதன் இன்றியமையாமையை வலியுறுத்தும் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை. இப்பத்திரிகையில் பெண்கள் விடுதலை பற்றி சிவகாமி என்பவர் தொடர்ந்து எழுதியுள்ளார். இவருடைய 'பெண்கல்விக் கும்மி' என்னும் நூல் முழுமையாக இப்பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இவை மட்டுமல்லாது 13 மொழிபெயர்ப்புக் கவிதைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஷெல்லி, கிரே, கீட்ஸ், கோல்ட்ஸ்மித் போன்றோர்களின் கவிதைகள் தமிழ் மரபுக்கேற்ப தழுவி மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாக நாகப்பட்டினம் வேதாச்சலம் பிள்ளை (மறைமலையடிகள்) ஆங்கிலக் கவி கிரேவின் 'Ode on the Distant Prospect of Eton College" செவ்வந்தி மாநகரக் கல்லூரிப்பாட்டு என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். சமகாலப் பத்திரிகைகளில் பெருமளவில் வெளியிடப்பட்ட கட்டுக்கதைகள், புராணக் கதைகள் போன்றவை வெளியிடப்படவில்லை. யதார்த்த போக்கிலான சில கதைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றில் சில ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற அயல் மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. பத்துக்கும் அதிகமான பாசுரங்கள், பதிகங்கள் தோத்திரப் பாடல்கள் வெளியிடப்பட்டுள்ளன. விக்கிரமோர்வசியம், வெனிஸ் வர்த்தகன், சாந்தி விலாசம், முத்திராராட்சசம், சந்திரமுகன், சத்தியவதி, ஜெயகாந்தன், நித்திலமணி, ஹிரண்மயி ஆகிய நாடகங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றுள் பல வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. பெரும்பாலும் உரைநடையும் கவிதையும் விரவிய நடையில் எழுதப்பட்டுள்ளன. இப்பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவரான பரிதிமாற்கலைஞன் நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலினை எழுதியிருப்பினும், தமிழ் நாடகங்களைப் பற்றிய விமர்சனங்களோ, குறிப்புகளோ, அறிமுகங்களோ ஞானபோதினியில் இடம்பெறவில்லை. சமகாலச் சமூக நிகழ்வுகளை பிரதிபலித்திடும் வகையில் 27 கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பெண்கல்வியை வலியுறுத்தும் பெண்கல்வி(1900), காக்கைப் பெண்ணிலுங் கல்லிழைப்பதா(1901), மாதர் சுதந்திரம்(1900), செந்தமிழ்க் கல்வி(1897) உள்ளிட்ட 12 கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. சமயம் தொடர்பாகவும், இந்திய வரலாறு தொடர்பாகவும் 40 கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. அறிவியல், பொருளாதாரம், உளவியல், மருத்துவம் தொடர்பான கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

சமகாலத்தில் பிற பத்திரிகைகளில் கோலோச்சிய புதினங்கள் மிகக் குறைந்த அளவிலேயே வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாக லீலை, ருக்குமணி சரித்திரம், இராதாராணி ஆகிய மூன்று புதினங்களே தொடர்கதைகளாக வெளியிடப்பட்டுள்ளன. இப்புதினங்களும் புதின இலக்கியத்திற்கே உரிய மொழியினை விடுத்து தனித்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியின் 'மதிவாணன்' என்னும் தனித்தமிழ் கதை நவீனம் என்ற பெயரில் தொடர்கதையாக வெளியிடப்பட்டுள்ளது. பின்னாளில் இது தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் சமகால விமர்சகர்களாலும் பத்திரிகைகளாலும் இதனை நவீனம் என்று ஏற்றுக்கொள்ளும் போக்குக் காணப்படவில்லை.

மேலும் புதிய இலக்கிய வகைகளாக உருப்பெற்று வந்த நாற்றுக்காணக்கான நாவல்களும், சிறுகதைகளும் சமுதாயச் சீர்கேடுகளுக்கு இட்டுச் செல்வதாகவும், இலக்கணப் பிழைகளோடும், பேச்சுவழக்குகளோடும் வெளிவந்து தமிழ்மொழிக்குக் கேடு விளைவிப்பதாகவும் இப்பத்திரிகையில் பங்களிப்புச் செய்த தமிழறிஞர்கள் எண்ணினர். இதுபோன்ற காரணங்களால் ஞானபோதினி பத்திரிகையில் நாவல்களுக்கும், சிறுகதைகளுக்கும் பெரிய அளவில் இடமளிக்கப்படவில்லை. ஆனால் இதேகாலத்தில் வெளிவந்த விவேகசிந்தாமணி இதழில் இவ்விலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

'ஞானபோதினி' பத்திரிகை ஆங்கிலத்திலுள்ள 'சானெட்' என்னும் இலக்கிய வகையை தனிப்பாசுரத் தொகை என்னும் பெயரில் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தது என்று குறிப்பிடலாம். பின்னாளில் இப்பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவராகவும் திகழ்ந்த வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்[8] ஞானபோதினி பத்திரிக்கையில் 1898 சனவரி முதல் 1900 அக்டோபர் வரை இரண்டாண்டு காலம் "தனிப்பாசுரத் தொகை" என்னும் பெயரில் அன்பு, அறிவு, துயில், மலர், பரிதி,மதி, விண்மீன், கல்வி, மொழி, குரு, உடல், நிலன், இரவு, காளை, வளி, இசை, மனைவி, புள், மனிதன், மாதர், வரைவின் மகளிர், இல்லறம், அழகு, காதல், வரைவு, கற்பு, மனன், கணவன், வாய்மை, காலம், வெகுளி,மயக்கம், நூல், மாணவன், தொழில், போர் ஆகிய 37

தலைப்புகளில் தொடர்ந்து பாசுரங்களை எழுதி வந்துள்ளார்." இதனைப் பற்றி இப்பத்திரிகையின் ஆசிரியர் மு.சு. பூர்ணலிங்கம் பிள்ளை,

> 'இப்பாசுரத் தொகையின் ஒவ்வொரு பாசுரத்திலும் ஆங்கிலேய ஆரிய திராவிட பாஷைகளிலுள்ள அருமையான பன்னூல்களிலும் ஆங்காங்கே சிதறி மறைந்து கிடக்கும் நுண்ணிய பொருள்களைத் திண்ணிதாய்ச் சேர்த்துத் தீம்பாவணிகளிற் பாங்காயமைத்துப் பகிர்ந்த பரிதிமாற்கலைஞன் எடுத்த முயற்சியிற் பின்னிடாது, மாதந்தோறும் இத்தகைய பாசுரங்கள் இப்பத்திரிகையிற் தோன்றும்படி வரைந்தனுப்பின் அவற்கு யாமும் எமது நண்பர்களுமாகிய இப்பத்திரிகா பிமானிகளனைவரும் பாராட்டும் நன்றிக்குக் கணக்கிலதென்பதை ஒருவாறு ஈண்டு தெரிகின்றோம்" *(ஞானபோதினி 1898,சனவரி-20)*

என்று தமது விருப்பத்தினை வெளிப்படுத்துகிறார்.

ஞானபோதினி பத்திரிகையில்தான் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் முதன்முதலில் பரிதிமாற்கலைஞன் என்னும் புனைப்பெயரில் "தனிப்பாசுரத்தொகை"யை எழுதினார். இப்பெயரே பின்னாளில் அவருடைய அடையாளமாக மாறியது. இப்பாசுரங்கள் ஒவ்வொன்றும் ஒரு பெரிய விஷயத்தை எடுத்து மிகவும் நுட்பமாக ஆராய்ந்து தெளிந்த பின்னர் வெளியிடப்பட்டுள்ளது. சில இடங்களில் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளிலுள்ள கருத்துக்களைத் தழுவியும் உள்ளது. பரிதிமாற்கலைஞரின் மறைவிற்குப் பிறகு அவருடைய மகனால் இப்பாசுரங்கள் தனி நூலாக வெளியிடப்பட்டது.

ஞானபோதினியின் தமிழ்ச் சிந்தனை

ஞானபோதினி பத்திரிகையைத் தொடங்கியவர் முன்னரே குறிப்பிட்டதைப் போன்று சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கிய திரு.மு.சு. பூர்ணலிங்கம் பிள்ளை[9] ஆவார். அடிப்படையில் இவர் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தும் தமிழ்மொழி, இனம் பற்றி மிக ஆழமான ஆய்வு செய்தவர்களில் ஒருவராக விளங்கினார். ஆங்கிலத்தில் 32 நூல்களும், தமிழில் 18 நூல்களும் எழுதியவர்.

அவற்றுள் 1904 ஆம் ஆண்டு வெளிவந்த **A Primer of Tamil Literature**[10] என்னும் நூல் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் மொழி, இலக்கியம் குறித்த அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி முதன் முதலில் ஆங்கிலத்தில் வெளிவந்த தமிழ் இலக்கிய வராலாற்று நூல் இதுவாகும். அதுகாலம் வரையில் இதுபோன்றதொரு தமிழ் இலக்கிய வரலாற்று நூல் தமிழிலும் வெளியிடப்படவில்லை. இந்நூலுள் திராவிட இனம் பற்றியும், மொழி பற்றியும் ஆழமான கருத்துக்களை முன் வைத்தார். இக்காலக்கட்டத்தில் தான் சிந்து வெளி அகழ்வாராய்ச்சியும் நடைபெற்று வந்தது. சிந்து வெளி நாகரிகம் தமிழ் நாகரிகத்தோடு தொடர்புடையது என்ற விவாதத்தினைத் தொடங்கி வைத்ததிலும் இந்நூலுக்கு முக்கியப் பங்குண்டு. அதுபோன்றே திருக்குறளை உலக அளவில் அறியச் செய்தவர்களுள்[11] முக்கிய மானவராகத் திகழ்ந்தவர்.

இந்தப் பின்புலத்தோடும், இராமாயணத்தில் தமக்கிருந்த ஆழ்ந்த புலமையினாலும், இராமாயணத்திற்கெதிரான இலக்கியம் படைப்பதில் ஒருவராக இருந்த முனைப்பின் காரணமாகவும்[12] 1923இல் Ravana, The Great King of Lanka என்னும் நூலினை எழுதினார். இந்நூலுள் இராவணன் ஒரு தமிழ் மன்னன் என்பதனை ஆழமாகப் பதிவு செய்தார். பின்னாளில் புலவர் குழந்தை இராவண காவியம் இயற்றுவதற்கு ஒரு

தூண்டுகோலாக இந்த நூல் அமைந்திருக்க வாய்ப்புண்டு. தொடர்ந்து 1945இல் Tamil India என்னும் நூலை மிக விரிவான தகவல்களோடு எழுதினார்.

இதே காலகட்டத்தில் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிசெய்தவரும் ஞானபோதினி பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவராகச் செயல்பட்டவருமான வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் பரிதிமாற்கலைஞன் தமது நண்பர் மு.சு.பூர்ணலிங்கம் பிள்ளை தமிழ்மொழி இலக்கிய வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிய அதே காலக்கட்டத்தில் தமிழ் மொழி வரலாறு என்னும் நூலினைத் தமிழில் எழுதினார்.

தமிழ் ஒரு உயரர்தனிச் செம்மொழி என்பதனை முதன்முதலில் பல்வேறு இலக்கிய, இலக்கணத் தரவுகளோடு மெய்ப்பித்தார். கடல்கொண்ட குமரிக்கண்டம் குறித்த உரையாடலையும் தொடங்கி வைத்தார். 12 வயது வரை தமிழ்மொழியிலேயே கற்க வேண்டும் என்று முழங்கினார். பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத்தினை விலக்கி தமிழுக்கு முதன்மை அளிக்க வேண்டும் என்று குரலெழுப்பினார். இதுதொடர்பான கட்டுரைகளை ஞானபோதினி இதழில் தொடர்ந்து எழுதி வந்தார்.

மேற்கண்ட பின்புலத்தில் பார்க்கும்போது தமிழ்மொழி, இனம், இலக்கியம் சார்ந்த செயல்பாடுகளில் திரு. மு.சு. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்களும் பரிதிமாற்கலைஞன் அவர்களும் ஒன்றுபட்டுச் செயல்பட்டனர். அந்த ஒற்றுமையின் விளைவாகத்தான் இவ்விருவரும் இணைந்து "ஞானபோதினி" பத்திரிகையை நடத்தினர். பரிதிமாற்கலைஞன் 1903ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமது 33 வயதில் காசநோயால் மரணமடையாமல் இருந்திருந்தால், அவருடைய சிறந்த பல பங்களிப்புகள் தமிழுக்குக் கிடைத்திருக்கும்.

ஞானபோதினி பத்திரிகையில் வெளியிடப்பட்ட நூதன வாசகப் புத்தகங்கள், மதுரைத் தமிழ்ச்சங்கம், வறுமையும் தமிழ்ப்புலமையும், தமிழ்ப் புலவர் பொறாமை, தமிழகராதி, தமிழ் நூலாதரிப்போர், சுதேச பாஷை நீக்கம், சர்வகலா சாலை விசாரணை, திராவிடர் வருகை, தமிழ்ப் பாடசாலைகள், மதுரைத் தமிழ்ச் சங்கம், சென்னைத் தமிழ்ப்பண்டிதர் குழப்பம், சுதேச பாலகர்களின் வித்தியாப்பியாசம் போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், தலையங்கங்கள் தமிழ் மொழி, இனம் குறித்த ஆராய்ச்சிகளுக்கும், விவாதங்களுக்கும் களமாக அமைந்தன.

இப்பத்திரிகையில் பல்வேறு பொருள் பற்றிக் கட்டுரைகள், படைப்புகள் வெளியிடப்பட்ட போதும் அரசியல் காழ்ப்புணர்ச்சி பற்றிய கட்டுரைகளோ, சாதி சங்கங்கள் பற்றிய கட்டுரைகளோ, விளம்பரங்களோ, சமய வேறுபாடு தூற்றும் கட்டுரைகளோ வெளியிடப்படவில்லை.

இப்பத்திரிகை ஆசிரியர்கள் இருவரும் தமிழ்மொழி, இனம் பற்றிய மிக ஆழமான ஆராய்ச்சிகள் செய்து திராவிட இனத்தின் பழமையை உலகறியச் செய்வதிலும், தமிழ் மொழியின் பழமையையும் செவ்வியல் தன்மையையும் நிலைநாட்டுவதிலும் ஈடுபட்டிருந்த நேரத்தில் 1897ஆம் வருடம் இந்தியாவின் எதிர்கால நிலைமை என்னும் தலைப்பில் சுவாமி விவேகானந்தர் சென்னையில் செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதி தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் எதிரான நிலைப்பாட்டில் இருப்பினும் ஞானபோதினியின் 1898 சனவரி இதழில் வெளிந்துள்ளது இப்பத்திரிகையின் நடுநிலைத் தன்மைக்கு சான்றாக அமைகிறது.

"இந்த சென்னை இராஜதானியிலே ஒரு விஷயம் பிரஸ்தாயிக்கப் பட்டிருக்கின்றது. அதாவது, இந்தப் பிராந்தியத்திலே திராவிடர்கள் என்ற ஜாதியார் இருந்தனர்

என்றும் அவர்கள் வடக்கேயிருந்த ஆரியர்களிற் சேராதவர்கள் என்றும், இத்தென்னிந்தியாவில் இருக்கும் பிராமணர்கள் மாத்திரம்தான் வடக்கே இருந்த ஆரியர்களினின்றும் பிரிந்துவந்தவர்க ளென்றும், ஏனையர் தென்னிந்திய மனிதர்கள் அல்லர் என்றும் பிராமணருக்கு முழுதும் வேறுபட்ட ஜாதியரென்றும் சொல்லுகின்றனர். இது முழுவதும் ஆதாரமற்றது. ஏனெனில் வடதேசத்தாருக்கும் தென்தேசத்தாருக்கும் பாஷாபேதம் இருக்கிற தென்பதொன்றே தவிர வேறு என்ன பேதம் இருக்கிறது? இங்கே சில வடதிசையர் வந்திருக்கிறோம். நமது ஆங்கில சிநேகிதர்கள் இந்தக் கூட்டத்தில் வடதேசத்தாரையும் தென்தேசத்தோரையும் பகுக்கு வல்லாரோ? இத்தேசத்துப் பிராமணர்கள் வடக்கேயிருந்து வந்தவர்களாயிற்றே அவர்கள் ஸம்ஸ்கிருதத்தை மறந்தனரே. ஏன் அவ்வாறே ஏனைய ஜாதியாரும் தங்கள் பாஷையை மறந்து திராவிட பாஷையைக் கற்றுக்கொண்டிருக்கக்கூடாது? இந்த நியாயம் இருதலைக் கொள்ளிபோல் இருதரத்தார்க்கும் பாதகமாமே. இவைகளை யெல்லாம் நம்பாதீர்கள்! திராவிடசனங்கள் இருந்திருக்கலாம். அவர்களில் காட்டிலும் மேட்டிலும் தங்கியிருக்கும் சிலர்போக மிகுந்தவர்கள் இங்கே கிடையாது. அவர்களுடைய பாஷையை மாத்திரம் வைத்துக்கொண்டதாக இருக்கக்கூடும். ஆனால் எல்லாரும் வடக்கே இருந்து வந்த ஆரியர்களே" *(ஞானபோதினி,1898–சனவரி)*

இவ்வாறு தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், வரலாறு, பண்பாடு, சமயம் தொடர்பான பல்வேறு களங்களில் ஞானபோதினி பங்களிப்புச் செய்துள்ளதையும், 1897 முதல் 1904 ஆம் ஆண்டுவரை வெளிவந்த ஞானபோதினி பத்திரிகையின் 84 இதழ்களும் தமிழ்மொழி, இலக்கிய ஆராய்ச்சிக்கு வித்திட்டதோடு, தமிழ் ஆராய்ச்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்த ஆவணமாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

எதிர்வரும் காலங்களில் இப்பத்திரிகையின் பங்களிப்புகள் குறித்து மிக விரிவான முறையில் ஆய்வு செய்தல் வேண்டும். அவ்வாறான பணி என்பது தமிழ் ஆராய்ச்சியின் வரலாற்றில் விடுபட்ட சில பகுதிகளை இட்டு நிரப்பும் என்பது திண்ணம்.

அடிக்குறிப்புக்கள்

1. **A history of Tamil journalism, by Mrinal Chatterjee, Eastern India campus of The Indian Institute of Mass Communication in Dhenkanal, Odisha.**
2. சூரியோதயம் முதல் உதயசூரியன் வரை, தலித் இதழ்கள்:1869–1943, ஜெ.பாலசுப்பிரமணியன், காலச்சுவடு பதிப்பகம், 2017.
3. தமிழாராய்ச்சியின் வளர்ச்சி, ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், அமுத நிலையம் விரைவேட் லிட், 1959, முதற்பதிப்பு.
4. தமிழாராய்ச்சியின் வரலாறு, முதல் தொகுதி, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறை வெளியீடு, முதற்பதிப்பு, 1998.
5. தமிழாராய்ச்சி வரலாறு : ஞானபோதினி (1897–1903), மு.வையாபுரி, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 2000.
6. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள முந்நீர்ப்பள்ளம் என்னும் ஊரில் 1866 இல் பிறந்தவர். பள்ளிப் படிப்பை முடித்தவுடன் பரமக்குடி நீதிமன்றத்தில் எழுத்தராகப் பணியாற்றினார். பின்னர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் மேற்படிப்பை

முடித்தார். கல்லூரிப் படிப்பு முடித்தவுடன் பாளையங் கோட்டை இந்துக் கல்லூரி, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி, கோயம்புத்தூர் புனித மைக்கேல் கல்லூரி, திருச்சி எஸ்.பி.ஜி.கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார். ஆங்கிலப் பேராசிரியராக இருந்த பூர்ணலிங்கம் பிள்ளை, தமிழ்ப் பற்றும் தமிழ் இன உணர்வும் கொண்டு வாழ்ந்ததுடன், ஆங்கிலத்திலும் தமிழிலும் 50க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தும் தமிழுக்குப் பெரும் பணியும் ஆற்றியுள்ளார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் பணியாற்றியபோது "ஞானபோதினி" என்னும் மாதப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். பின்னர், நீதிக்கட்சியினரின் "நீதி" என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்றி சமூக நீதிக்காகக் குரல் கொடுத்தார்., தகவல் ஆதாரம் – "நெல்லைத் தமிழ்ப் புலவர்கள்" என்னும் நூல்.

7. மு.வையாபுரி, தமிழாராய்ச்சி வரலாறு : ஞானபோதினி, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேட்டின் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அடிப்படையில் இங்கு மேற்கோள் காட்டப்படுகிறது.

8. மதுரை அருகே விளாச்சேரி என்னும் ஊரில் பிறந்தவர். வடமொழியைத் தந்தையாரிடமும் தமிழை மதுரை சபாபதி முதலியாரிடமும் கற்றார். இளவயது முதலே தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். பின்னாளில் இளங்கலைப் பட்டப்படிப்பில் தமிழ்மொழியிலும், மெய்யியலிலும் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார். பின்னர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும் தலைவராகவும் பணிசெய்தார். ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் ஆகிய நாடகங்களையும், தனிப்பாசுரத்தொகை, பாவலர் விருந்து, மதிவாணன், நாடகவியல், தமிழ் வியாசங்கள், தமிழ்மொழியின் வரலாறு, சித்திரக்கவி விளக்கம், சூர்ப்பநகை – புராண நாடகம் ஆகிய நூல்களை எழுதியதோடு, சயம்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி, மகாலிங்கையர் எழுதிய இலக்கணச்சுருக்கம், புகழேந்திப் புலவரின் நளவெண்பா, உத்திரகோச மங்கை மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களை பதிப்பித்தும் உள்ளார். தனித்தமிழ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். ஞானபோதினி என்னும் பத்திரிகையின் ஆசிரியராகச் சில காலம் இருந்தவர். ராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களால் திராவிட சாஸ்திரி எனச் சிறப்பிக்கப்பட்டவர்.

9. The matriculation reader. Thompson and Co. (1898), A Primer of Tamil Literature. Ananda Press(1904), Full notes on A.T. Quiller Couch's historical tales from Shakespeare and Washington Irving's England's rural life and Christmas customs. P. R. Rama Ayyar & Co,(1913), Studies and Critiques. P. R. Rama Iyer.(1914), Ten Tamil saints: sketches of their lives, works and teachings, together with bibliographies. G. A. Natesan. (1915), Ravana, The Great King of Lanka. Bibliotheca. (1923), Critical Studies in Kural. Bibliotheca (1929), St. Manickavasakar: his life and teachings. Bibliotheca (1929), Saint Appar. ,South India Saiva Siddhanta Works Publishing Society Ltd. (1934), Tamil India. South India Saiva Siddhanta Works Publishing Society Ltd., (1945), ஔவை குறள், ஆயிரத்து ஐம்பத்தைந்து செய்யுட்களையுடைய 'செய்யுள்கோவை, விவேக விளக்கம், இராயர் அப்பாசி கதைகள், வாசகத்திரட்டு,இரு சிறு கதைகள், பன்னிரு பெண்மணிகள், நபி நாயகமும் கவி வாணர்களும், மருத்துவன் மகள், தமிழரும் தமிழ்ப்புலவர்களும், தப்பிலி, காமாட்சி

என்ற நவநகை நாடகம், ஐரோப்பியர் போர், நவராத்திரி விரிவுரைகள், சூரபதுமன் வரலாறு முதலிய நூல்களை எழுதியுள்ளார்– தகவல், நெல்லைத் தமிழ்ப் புலவர்கள் நூல்,(வி.சுந்தரம் ஐ.ஏ.எஸ். கட்டுரை).

10. இந்நூல் 1929 ஆம் ஆண்டு Tamil Literature என்னும் பெயரில் மறுபதிப்புச் செய்யப்பட்டது. தற்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிழற்படப் பதிப்பு வடிவில் பதிப்பித்திருக்கிறது.

11. "Thirukkural was made globally known by translating it into the global language English by many Scholars. Such as Rev.G.U.Pope, Rev.W.H.Drew, Rev.John Lazharus, Mr.M.S.Poornalingam Pillai and Mr. V.V.S.Iyer– S.Viswanathan, Frontline, Volume–21, Issue 22, Oct.23–N0v.5, 2004

12. Anti–Ramayana Literature is equally prodigious and powerfull all over India. In Tamilnadu alone quite a few scholars, such as sami vedachalam, P.V.Manikka nayakkar, P.Chidambaram Pillai, V.P.Subramaniya Mudaliyar, M.S. Poornalingam Pillai, Chandrasekara Pavalar and C.N.Annadurai have written popular works against the Ramayana.P:55, Presenting the Past: Anxious History and ancient future in Hindutva India, S.P. Udayakumar, Greenwood Publishing Group,2005.

INAM : INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES
இனம் இனத்தைச் சேரும்